# பராபரன் நூற்றிரட்டு



வெளியீடு - பராபரம் பாடசாலை

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பராபரன் நூற்றிரட்டு |
| ஆசிரியர் | : | பராபரன் |
| வெளியீடு | : | பராபரம் பாடசாலை |
| மொழி | : | தமிழ் |
| நூல் வகை | : | தன்னாட்டம் |
| முதற்பதிப்பு | : | 2024 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 35 |
| தாள் | : | A4 |
| எழுத்து அளவு | : | பல |
| உரிமை | : | அனைவருக்கும் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| விலை | : | அகவிழிப்பு |

# என்னுரை

பிரக்ஞனும், பிரபஞ்சநாதனுமாகிய ஈஸ்வரன், **பராபரன்** என்ற நாமம் கொண்டு பல்வேறு சமயங்களில் இயற்றிய நூல்கள் அனைத்தையும் ஒன்றாக திரட்டி, **பராபரன் நூற்றிரட்டு** என்று இப்புத்தகத்திற்கு பெயரிட்டு அன்பர்களுக்கு சமர்ப்பிக்கிறார்.

இதில் உள்ள தலைப்புகள் அனைத்தும், ஆசிரியர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தான் இயற்றியவற்றை தனி புத்தகங்களாக பல்வேறு சமயங்களில் வெளியிட்டுள்ளார். இப்போது அவற்றை ஒரே புத்தகாமாக வெளியிடுவதில் ஆசிரியரின் இச்சிறிய முயற்சி.

இந்நூலின் ஆசிரியர், அன்பர்கள் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையில் பாடல்களுக்கு விளக்கவுரை கொடுத்தும், பொருள் வெளிப்படையாக உள்ள பாடல்களுக்கு **பொருள் வெளிப்படை** என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலினை படிக்கும் அன்பர்கள் அனைவருக்கும், எல்லாம் வல்ல ஈஸ்வரன், படிப்பவரின் சிந்தையில் நன்றாக விளங்கும்படி செய்யுமாறு பணிகின்றேன்.

**அன்புடன்,**

**பராபரன்**

# உள்ளுறை


1. ஸர்வம் பிரம்ம மயம் 05

2. யார் அவன்? 14

3. நானா நான் 21

4. உள்ளக் குமுறல் - 1 27

5. உள்ளக் குமுறல் - 2 32

6. குருநாதர் மணிமாலை 34

# 1

# ஸர்வம் பிரம்ம மயம்

## பாடல் வரிகள் மூலம்

ஸர்வம் பிரம்ம மயம் ரே ரே ||

கிம் வசநீயம் கிம் அவசநீயம்
கிம் ரசநீயம் கிம் அரசநீயம் ||1||

கிம் படநீயம் கிம் அபடநீயம்
கிம் பஜநீயம் கிம் அபஜநீயம் ||2||

கிம் போத்தவ்யம் கிம் அபோத்தவ்யம்
கிம் போக்தவ்யம் கிம் அபோக்தவ்யம் ||3||

ஸர்வத்ர ஸதா ஹம்ஸ தியானம்
கர்த்தவ்யம் போ முக்தி நிதானம் ||4||

ஸர்வம் பிரம்ம மயம் ரே ரே ||

**- ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர்**

# பாடல் வரிகள் தமிழாக்கம்

படைப்பு இறைவ(எ)ன் மயம் ரே ரே ||

எது பேசப்பட்டதோ எது பேசப்படாததோ
எது எழுதப்பட்டதோ எது எழுதப்படாததோ ||1||

எது கற்கப்பட்டதோ எது கற்கப்படாததோ
எது பாடப்பட்டதோ எது பாடப்படாததோ ||2||


எது உபதேசிக்கப்பட்டதோ எது உபதேசிக்கப்படாததோ
எது அனுபவிக்கப்பட்டதோ எது அனுபவிக்கப்படாததோ ||3||

எங்கும் எப்பொழுதும் எல்லாவற்றிலும்
'நான் இருக்கிறேன்' என்ற திடானுபவமே முக்தி ||4||


படைப்பு இறைவ(எ)ன் மயம் ரே ரே ||

- பராபரன்

# படைப்பின் விளக்கம்



பிரம்மம்
(படைப்பு)
அறிவு(உயிரு)ள்ள
சேதனம்
அறிவ(உயிர)ற்ற
அசேதனம்
இடம் (வெளி)
அறி(உணர்)வு
அறி(உணர்)வு
அறி(உணர்)வு
சக்தி (மனம்)
உ(டல்)பாதி
உ(டல்)பாதி

# படைப்பு - சுக்ஷும (சேதன) வெளிப்பாடு




**பஞ்சீகரணம்** என்ற செயல்முறையால், சுக்ஷும பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஸ்தூல பஞ்சபூதங்கள் உருவாகி, படைப்பு வெளிப்பட்ட்து என வேதாந்த சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது.

<u>குறிப்பு:</u> **பஞ்சீகரணம்** பற்றி மேலும் விவரங்களுக்கு, பராபரம் பாடசாலையின் மூலம் வெளியிடப்பட்ட **பஞ்சீகரணம்** என்ற புத்தகத்தை/ஒலிபேழையை அன்பர்கள் கவணிக்கவும்.




| | **சுஷும பூதங்கள்** | **தன்மாத்திரை** | **சக்தி (மனம்)** | **உ(டல்)பாதி** |
|---|---|---|---|---|
| **அறி(உணர்)வு** | ஆகாயம் | சப்தம் | கேட்டல் | காது |
| | வாயு | ஸ்பரிசம் | உணர்தல் | தோல் |
| | அக்னி | ரூபம் | பார்த்தல் | கண் |
| | நீர் | ரசம் | ருசித்தல் | நாக்கு |
| | பூமி | கந்தம் | நுகர்தல் | மூக்கு |

# படைப்பு - ஸ்தூல (சேதன) வெளிப்பாடு

**பிரம்மம் (படைப்பு)** → **அறிவு(உயிரு)ள்ள சேதனம்** →
- **அறி(உணர்)வு**
- **சக்தி (மனம்)**
- **உ(டல்)பாதி**


**பஞ்சீகரணம்** என்ற செயல்முறையால், ஸ்தூல பஞ்சபூதங்களின் சேர்க்கையால், உடல்(உபாதி)களை உருவாக்கிகொண்டு, அறி(உணர்)வு, மனதின் மூலம் வெளிப்பட்ட நிலை **சேதனம்** என வேதாந்த சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது.

<u>குறிப்பு:</u> **பஞ்சீகரணம்** பற்றி மேலும் விவரங்களுக்கு, பராபரம் பாடசாலையின் மூலம் வெளியிடப்பட்ட **பஞ்சீகரணம்** என்ற புத்தகத்தை/ஒலிபேழையை அன்பர்கள் கவணிக்கவும்.



| | **சக்தி (மனம்)** | **ஸ்தூல உ(டல்)பாதி** |
|---|---|---|
| **அறி(உணர்)வு** | ஒரு அறிவு | தாவரங்கள் |
| | இரண்டு அறிவு | புலு, பூச்சிகள் |
| | மூன்று அறிவு | ஊர்வன ஜந்துக்கள் |
| | நான்கு அறிவு | பறவைகள் |
| | ஐந்து அறிவு | விலங்குகள் |
| | ஆறு அறிவு | மனிதர்கள் |

# படைப்பு - ஸ்தூல (அசேதன) வெளிப்பாடு






பஞ்சீகரணம் என்ற செயல்முறையால், ஸ்தூல பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உடல்(உபாதி)களை உருவாக்கிகொண்டு, அறி(உணர்)வு, மனம் என்ற கருவி மூலம் வெளிப்பபடாத நிலை **அசேதனம்** என வேதாந்த சாஸ்திரம் எடுத்துரைக்கின்றது [உதரணமாக: மணல், கல், சவம், சூரியர்கள், சந்திரர்கள், நட்சத்திரங்கள்].

<u>குறிப்பு:</u> **பஞ்சீகரணம்** பற்றி மேலும் விவரங்களுக்கு, பராபரம் பாடசாலையின் மூலம் வெளியிடப்பட்ட **பஞ்சீகரணம்** என்ற புத்தகத்தை/ஒலிபேழையை அன்பர்கள் கவணிக்கவும்.

# படைப்பு - இடம்/வெளி வெளிப்பாடு

| | | |
|---|---|---|
| **பிரம்மம் (படைப்பு)** | **இடம் (வெளி)** | **அறி(உணர்)வு** |



உண்மையில் இடம் (வெளி) என்பது மனத்தில் **ஏற்றிவைக்கபட்ட எண்ணங்கள்** மட்டுமே, அது வெறும் பெயர்/நாமம் என சாஸ்திரம் கூறுகின்றது.

**ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி** என்று வள்ளலாரும் கூறிப்பிடுகிறார். ஏனெனில் பிரபஞ்சத்தின் தொடக்கத்தையும் முடிவையும் இதுவரை விளக்க முடியவில்லை. விஞ்ஞானிகளோ - விண்வெளி தொடர்ந்து விரிவடைகிறது என்று கூறுகிறார்கள்.

**எனவே வெளி என்பது உணர்வாகவே உள்ளது**, இந்த பிரபஞ்சம் (படைப்பு) அனைத்தும் அறி(உணர்)வாகிய வெளியில் ஏற்றிவைக்கபட்டதே.

# படைப்பு - வெளிப்பட்ட முறை

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| **உணர்வு** | ✔ | ✔ | ✔ | ✔ | ✗ | ✗ | ✗ |
| **மனம்** | ✔ | ✔ | ✗ | ✗ | ✔ | ✗ | ✗ |
| **உபாதி** | ✔ | ✗ | ✔ | ✗ | ✔ | ✔ | ✗ |
| | **வ்யக்தம்** | **வ்யக்தம்** | **வ்யக்தம்** | **அவ்யக்தம்** | | | |

1 = **அறிவு(உயிரு)ள்ள (சேதனம் - ஒரு அறிவு முதல் ஆறு அறிவு வரை)**

2 = **பஞ்ச பூதங்கள்**

3 = **உயிரற்ற (அசேதனம் - கல்,மணல், சவம்)**

4 = **சத்(இருப்பு) நிலை**

5/6/7 = **உணர்வு இல்லாமல் ஒன்றுமில்லை - படைப்பு இல்லை.**



பஞ்சபூத கலப்பு என்ற செயல்முறைக்கு உட்படாத ஒரு விதை **அவ்யக்த** நிலையில் உள்ளது, அதுவே **அறி(உணர்)வு நிலை**.



அதுவே, ஒரு விதைக்கு பஞ்சபூத கலப்பு ஏற்படுமாயின், அது ஒரு செடியாக வெளிப்படும், இதற்கு **வ்யக்தம்(படைப்பு)** எனப்படும்.

# படைப்பு - திரிபுடி

| திரிபுடி | செயல்பாடு | உதாரணம் |
|---|---|---|
| பார்வை | அறி(உணர்)வு | நான் (சிவம்) |
| பார்ப்பான் | சக்தி (மனம்) | மனம் (சக்தி) |
| பார்க்கும் கருவி | உடல் | உபாதி |
| **பார்வை + பார்ப்பான் + பார்க்கும் கருவி = படைப்பு** | | |



**பார்வை** நான், **பார்ப்பான்** மனம் மற்றும் **பார்க்கும் கருவி** உடல் துணை கொண்டு, **பார்க்கப்படும் பொருள் படைப்பு** நிகழ்கிறது. இதனையே **திரிபுடி** என்று வேதாந்த சாஸ்திரம் கூறுகிறது.

**ஸர்வம் பிரம்ம மயம்** பாடலில் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் தனது **அறிவை-இருப்பை-உணர்வை** தெளிவாக விளக்கியுள்ளார், அது எப்படி எனில்.

**பிரம்மமாகிய தா(நா)ன் இருப்பதினாலேயே** பேசப்பட்டதும், எழுதப்பட்டதும், கற்கப்பட்டதும், பாடப்பட்டதும், கற்பிக்கப்பட்டதும், அனுபவிக்கப்பட்டதும் எதுவோ, அவை எல்லாம், மனமாகிய சக்தியின் துணை கொண்டு உ(டலின்)பாதியின் மூலம் உருவாக்கி படைத்துக் கொள்கிறேன்.

**பிரம்மமாகிய தா(நா)ன் இருப்பதினாலேயே** பேசப்படாததும், எழுதப்படாததும், கற்கப்படாததும், பாடப்படாததும், கற்பிக்கப்படாததும், அனுபவிக்கப்படாததும் எதுவோ, அவை எல்லாம் **தன்னிடத்தில் அறிவாக-இருப்பாக-உணர்வாக இருக்கிறது**.

இவ்வாறு மனதை விசாரித்த வலிமையான தீரன் (மோட்ச விரும்பி), எப்பொழுதும், எல்லாவற்றிலும் (ஹம்ச தியானம் = நான் இருக்கிறேன்) என்னும் தியானமே முக்திக்கானப் பாதை (வழி).

**படைப்பு இறைவ(எ)ன் மயம் - இறைவன் மட்டுமே இருக்கிறார், அது நா(தா)ன்!!!**

**ஓம் தத் சத்**

# 2

# யார் அவன்?

அவனின்றி அணுவுமில்லை, அசைவுமில்லை
அவனே ஸத், சித், ஆனந்தம்
அவனே காரணம், காரியம்
அவனே குணங்கள், குணங்களியக்கம் ||1||

அவனே ஸத்வம், ரஜஸ், தமஸ்
அவனே ஈஸ்வரன், படைப்பு
அவனே ஜீவன், ஜகத்
அவனே ஆகாயம், வாயு ||2||

அவனே அக்னி, நீர், நிலம்
அவனே பஞ்சீகரணம், அபஞ்சீகரணம்
அவனே ஜடம், அஜடம்
அவனே உடல், மனம்
அவனே சித்தம், அஹங்காரம், உள்ளம் ||3||

அவனே ஓரறிவு (செடி, மரம்....)
அவனே ஈரறிவு (புலு, பூச்சி...)
அவனே மூன்றறிவு (பல்லி, தவளை, பாம்பு...)
அவனே நான்கறிவு (பறவைகள்....)
அவனே ஐந்தறிவு (விலங்குகள்....)
அவனே ஆறறிவு (மனிதன்) ||4||

**இதன் பொருள் வெளிப்படை**

அவனே ஆக்கம், அழிவு
அவனே அமைதி, இரைச்சல்
அவனே அழகு, அழகின்மை
அவனே செய்பவன், செய்யாதவன் **||5||**

அவனே பார்பான், பார்வை, பார்க்கப்படுவது
அவனே கேட்பான், கேள்வி, கேட்கப்படுவது
அவனே நுகர்வான், நுகர்வு, நுகரப்படுவது
அவனே ருசிப்பான், ருசி, ருசிக்கப்படுவது
அவனே உணர்வான், உணர்வு, உணரப்படுவது **||6||**

அவனே அத்வைதம், த்வைதம்
அவனே ஞானி, அஞ்ஞானி
அவனே செயலும், செயலற்றதும்
அவனே வெளி, இடம் **||7||**

அவனே நாதம், ஓசை
அவனே கவிதை, கவிஞன்
அவனே நாடகம், நடிகன், நடிப்பு
அவனே கதை, காவியம்
அவனே புலமை, புலவன் **||8||**

அவனே மால், அயன், ருத்ரன்
அவனே தேவன், அசுரன்
அவனே மதங்கள், மதகடவுள்கள்
அவனே குறி, குறியீடுகள் **||9||**

அவனே எழுத்துக்கள், இலக்கணங்கள்
அவனே மொழியும், மொழிபெயர்ப்பும்
அவனே கதையும், கதாபாத்திரங்களும்
அவனே கவியும், விகடகவியும் **||10||**

அவனே இன்பம், துன்பம்
அவனே விருப்பு, வெறுப்பு
அவனே நல்வினை, தீவினை
அவனே புண்ணியம், பாவம் **||11||**

அவனே போரும், அமைதியும்
அவனே அண்டங்கள், பிரம்மாண்டங்கள்
அவனே இருளும், ஒளியும்
அவனே சண்டமாருதம், வெட்டும் மின்னல் **||12||**

அவனே மழை, புயல்
அவனே கடல், அலை, அழிபேரலை
அவனே பூமி, பூகம்பம்
அவனே மலை, மடு, மண், உலோகங்கள்
அவனே எரிமலை, எரிபிழம்பு **||13||**

அவனே வேதம், வேதாந்தம்
அவனே நீதிநெறி நூல்கள்
அவனே சித்தர், சித்திகள்
அவனே ஆராய்ச்சி, ஆராய்பவன், ஆராயப்படும் பொருள்
அவனே மனம், மனவிசாரம் **||14||**

அவனே ஆகாயத்தில் சப்தம்
அவனே வாயுவில் ஸ்பரிசம்
அவனே நெருப்பில் ரூபம்
அவனே நீரில் ரசம்
அவனே பூமியில் கந்தம் **||15||**

அவனே ஆகாயத்தில் வெளி (இடம்)
அவனே வாயுவில் வேகம்
அவனே நெருப்பில் பிரகாசம்
அவனே நீரில் குளுமை, சுவை
அவனே பூமியில் மணம், உயிர்கள் **||16||**

அவனே விதைகள், செடிகள்
அவனே மரங்கள், பூக்கள்
அவனே காய்கள், கனிகள்
அவனே நிழல், விறகு
அவனே காலங்கள் (குளிர், வசந்தம், கோடை மற்றும் இலையுதிர்) **||17||**

அவனே முட்டைகள், குஞ்சுகள்
அவனே தாய்மை, ஈன்றெடுபவைகள்
அவனே பருவங்கள் (குழந்தை, பாலன், வாலிபன் மற்றும் முதியவன்)
அவனே ஆண், பெண், அலி **||18||**

அவனே விஞ்ஞானம், மெய்ஞானம்
அவனே விஞ்ஞானி, மெய்ஞானி
அவனே மாற்றங்கள் (உதாரணம்: பால், தயிர், வெண்ணெய், நெய்)
அவனே வழிபாடு (புஜை, ஆலயவழிபாடு, மந்திரம், ஜபம்)
அவனே செயல்கள் (ப்ராணாயாமம், யோகாஸனம், த்யானம்)
அவனே யாகங்கள் (வேள்வி, தவம்) **||19||**

அவனே தாய், தந்தை
அவனே குரு, சிஷ்யன்
**அவனின்றி தெய்வம் ஒன்றிங்கில்லை**
அவனே விருந்தினர்கள் **||20||**

அவனே சூத்திரன், வைசியன்
அவனே க்ஷத்ரியன் ,பிராமணன்
அவனே இயேசு, அல்லா
அவனே புத்தர், மஹாவீரர் **||21||**

அவனே சிவன், சக்தி
அவனே விஷ்ணு, லஷ்மி
அவனே பிரம்மா, ஸரஸ்வதி
அவனே விநாயகர், முருகன் **||22||**

அவனே மாரியம்மா, மேரியம்மா, முனீஸ்வரன்
அவனே மந்திரம், யந்திரம், தந்திரம்
அவனே இயந்திரம், கருவிகள்
அவனே அறிவு, அறியாமை **||23||**

அவனே பிரம்மச்சாரி, இல்லான்
அவனே வானப்ரஸ்தன், ஸந்யாசி
அவனே இல்லத்தாள், தேவதாசி
அவனே பேடு, மலடு **||24||**

அவனே நல்லவர், கெட்டவர்
அவனே வீரன், கோழை
அவனே அறிவிலி, அறிவாளி
அவனே திருடன், திருடனை பிடிப்பவன் **||25||**

அவனே சூரியர்கள், சந்திரர்கள்
அவனே கிரகங்கள், நட்சத்திரங்கள்
அவனே சுற்றும் கோள்கள், வளிமண்டலங்கள்
அவனே அமாவாசை, பௌர்ணமி **||26||**

அவனே நாடு, நகரம்
அவனே அரசர், ஆண்டி, மந்திரி, சட்டம்
அவனே கல்வி, கேள்வி
அவனே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிலைபெறல்
அவனே ஏழை, பணக்காரன் **||27||**

அவனே இளவேனில், முதுவேனில்
அவனே கார் காலம், குளிர் காலம்
அவனே முன்பனி, பின்பனி **||28||**

அவனே கயிறு, பாம்பு
அவனே சிப்பி, வெள்ளி
அவனே மண், பானை
அவனே மெய்யறிவு, தப்பறிவு **||29||**

அவனே முப்பரிமாணங்கள்
அவனே மூன்று ஈஸ்வர (பிரம்மா, விஷ்ணு, சிவன்) அம்சங்கள்
அவனே மூன்று (இச்சா, க்ரியா, ஞான) சக்திகள்
அவனே மூன்று (அ, உ, ம) அக்ஷரங்கள் **||30||**

அவனே மூன்று சரிரங்கள் (ஸ்தூல, சுக்ஷம, காரணம்)
அவனே மூன்று நிலைகள் (விழிப்பு, கனவு, தூக்கம்)
அவனே மூன்று குணங்கள் (ஸத்வம், ரஜஸ், தமஸ்)
அவனே மூன்று வேதங்கள் (ரிக், யஜுர், ஸாமம்)
அவனே மூன்று காலங்கள் (இறந்த, நிகழ், எதிர்) **||31||**

அவனே மூன்று சொற்கள் (ஒருமை, பன்மை, படர்க்கை)
அவனே மூன்று குறள் (அறத்து, பொருள், காமத்து) பால்கள்
அவனே மூன்று தமிழ் (இயல், இசை, நாடகம்)
அவனே மூன்று சங்கங்கள் (தலை, இடை, கடை)
அவனே படைப்பின் மூன்று நிலை (வந்து, இருந்து, போகின்ற)
அவனே மூன்று அணுக்கூறுகள் (எலக்ட்ரான், புரோட்டான், நியுட்ரான்) **||32||**

அவனே ஆத்மா, உணர்வு
அவனே பிரம்மம், தூய இருப்பு
அவனே தூய அறிவு, பரிசுத்த ஆவி
அவனே அருட்பெரும் ஜோதி, வெட்டவெளி **||33||**

# யார் அவன்?

# அவனே நான்(பராபரன்)

**ஓம் தத் சத்**

# 3

# நானா நான்

எது வேணும் சொல் மனமே?
- உடலென்னும் நானா அல்லது உடலற்ற நானா
- சித்தமென்னும் நானா அல்லது சித்தமற்ற நானா
- புத்தியென்னும் நானா அல்லது புத்தியற்ற நானா
- அஹங்காரமுள்ள நானா அல்லது அஹங்காரமற்ற நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||1||

எது வேணும் சொல் மனமே?
- அழிவுறும் நானா அல்லது அழியாத நானா
- வினையுறும் நானா அல்லது வினையில்லா நானா
- குறையுறும் நானா அல்லது குறையில்லா நானா
- அமைதியற்ற நானா அல்லது அமைதியான நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||2||

எது வேணும் சொல் மனமே?
- உருவமுள்ள நானா அல்லது உருவமற்ற நானா
- தெளிவான நானா அல்லது தெளிவற்ற நானா
- சங்கமுள்ள நானா அல்லது சங்கமற்ற நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||3||

**இதன் பொருள் வெளிப்படை**

எது வேணும் சொல் மனமே?
- காமமுள்ள நானா அல்லது காமமற்ற நானா
- க்ரோதமுள்ள நானா அல்லது க்ரோதமற்ற நானா
- லோபமுள்ள நானா அல்லது லோபமற்ற நானா
- மோகமுள்ள நானா அல்லது மோகமற்ற நானா
- மதமுள்ள நானா அல்லது மதமற்ற நானா
- மாத்சர்யமுள்ள நானா அல்லது மாத்சர்யமற்ற நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||4||

எது வேணும் சொல் மனமே?
- சிற்றின்ப நானா அல்லது பேரின்ப நானா
- இருமையுள்ள நானா அல்லது இருமையற்ற நானா
- பாவமுள்ள நானா அல்லது பாவமற்ற நானா
- புண்ணியமுள்ள நானா அல்லது புண்ணியமற்ற நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||5||

எது வேணும் சொல் மனமே?
- பார்கின்ற நானா அல்லது பார்பானாகிய நானா
- கேட்கின்ற நானா அல்லது கேட்பானாகிய நானா
- சுவைகின்ற நானா அல்லது சுவைபானாகிய நானா
- முகருகின்ற நானா அல்லது முகர்வானாகிய நானா
- உணருகின்ற நானா அல்லது உணர்வானாகிய நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||6||

எது வேணும் சொல் மனமே?

- ஸ்தூலமான நானா அல்லது ஸ்தூலமற்ற நானா
- சுக்ஷுமமான நானா அல்லது சுக்ஷுமமற்ற நானா
- காரணமான நானா அல்லது காரணமற்ற நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||7||

எது வேணும் சொல் மனமே?

- பூஜிக்கின்ற நானா அல்லது பூஜைக்குரிய நானா
- த்யானிக்கின்ற நானா அல்லது த்யானதிற்குரிய நானா
- ஜபிக்கின்ற நானா அல்லது ஜபத்திற்குரிய நானா
- தவம் செய்யும் நானா அல்லது தவத்திற்குரிய நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||8||

எது வேணும் சொல் மனமே?

- விவேகமற்ற நானா அல்லது விவேகமுள்ள நானா
- வைராக்கியமற்ற நானா அல்லது வைராக்கியமுள்ள நானா
- சாதனைகள் செய்யும் நானா அல்லது சாதனைகளற்ற நானா
- எண்ணுகின்ற நானா எண்ணமற்ற நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||9||

எது வேணும் சொல் மனமே?
- சாஸ்திரங்கள் கற்கும் நானா அல்லது சாஸ்திரங்களுக்கு ஆதாரமான நானா
- அணுகூறுகளான நானா அல்லது அணுவுக்கு ஆதாரமான நானா
- கர்மமுள்ள(வினையுள்ள) நானா அல்லது கர்மமற்ற(வினையற்ற) நானா
- கர்மம்(செயல்)செய்யும் நானா அல்லது கர்மம(செயல)ற்ற நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||10||

எது வேணும் சொல் மனமே?
- சலனமுள்ள நானா அல்லது சலனமற்ற நானா
- காலமுள்ள நானா அல்லது காலமற்ற நானா
- தேசமுள்ள நானா அல்லது தேசமற்ற நானா
- பஞ்ச பூதங்களால் ஆன நானா அல்லது பஞ்ச பூதங்களுக்கு ஆதாரமான நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||11||

எது வேணும் சொல் மனமே?
- குணங்களான நானா அல்லது குணங்களற்ற நானா
- பிறவியுறும் நானா அல்லது பிறவியற்ற நானா
- நிலையற்ற நானா அல்லது நிலையான நானா
- இந்த்ரியங்களால் ஆளப்படும் நானா அல்லது இந்த்ரியங்களை ஆளும் நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? ||12||

எது வேணும் சொல் மனமே?
- முக்தி வேண்டும் நானா அல்லது முக்தி அளிக்கும் நானா
- சக்தி வேண்டும் நானா அல்லது சக்தி அளிக்கும் நானா
- பக்தி வேண்டும் நானா அல்லது பக்தி அளிக்கும் நானா
- யுக்தி வேண்டும் நானா அல்லது யுக்தி அளிக்கும் நானா
- சித்தி வேண்டும் நானா அல்லதி சித்தி அளிக்கும் நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? **||13||**

எது வேணும் சொல் மனமே?
- ரூபமுள்ள நானா அல்லது ரூபமற்ற நானா
- நாமமுள்ள நானா அல்லது நாமமற்ற நானா
- மயக்கமுள்ள நானா அல்லது மயக்கமற்ற நானா
- அநித்தியமானா நானா அல்லது நித்தியமான நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? **||14||**

எது வேணும் சொல் மனமே?
- செல்வம் வேண்டும் நானா அல்லது செல்வமான நானா
- அறிவு வேண்டும் நானா அல்லது அறிவான நானா
- கீர்த்தி வேண்டும் நானா அல்லது கீர்த்தியான நானா
- வரம் வேண்டும் நானா அல்லது வரம் அளிக்கும் நானா
- இன்பம் வேண்டும் நானா அல்லது இன்பத்திற்க்கு அப்பாற்பட்ட நானா
- துன்பம் வேண்டா நானா அல்லது துன்பத்திற்க்கு அப்பாற்பட்ட நானா
மனமே எது வேணும் சிந்தித்து பார்? **||15||**

எது வேணும் சொல் மனமே?

- விருப்பம் வேண்டும் நானா அல்லது விருப்பத்திற்க்கு அப்பாற்பட்ட நானா
- வெறுப்பு வேண்டா நானா அல்லது வெறுபிற்க்கு அப்பாற்பட்ட நானா
- மனதால் ஆளும் நானா அல்லது மனத்திற்க்கு அப்பாற்பட்ட நானா
- வேண்டுமென்ற மனம் வேண்டா நானா அல்லது போதுமென்ற மனம் வேண்டும் நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? **||16||**

எது வேணும் சொல் மனமே?

- த்வைத நானா அல்லது அத்வைத நானா
- பற்றுடைய நானா அல்லது பற்றற்ற நானா
- ப்ரமையான நானா அல்லது பிரம்மமான நானா
- அநாத்மாவான நானா அல்லது ஆத்மாவான நானா
- மூடிகிடக்கும் நானா அல்லது வெட்டவெளியான நானா

மனமே எது வேணும் சிந்தித்து பார்? **||17||**

# மனமே எது வேணும் சிந்தித்து பார்?

**ஓம் தத் சத்**

# 4
# உள்ளக்குமுறல்கள் - 1

எத்தனை சான்றோர்கள் இம்மானிட சமுதாயத்திற்கு **மனதை** பற்றி எடுத்துரைத்தும், அதனை பற்றி செல்லும் மனிதன், அதன் போன போக்கில் இருந்து, வாழ்ந்து, மடிந்து மீண்டும், இந்த சாரமில்லா சம்ஸாரத்தில் உழலுகிறான் என்பது தான் உண்மை. |1||

பிறக்கின்ற போது நாம் யாரை, எதை, நம்பி பிறந்தோம் என்ற தெளிவு பிறந்தால், இறக்கின்ற போது நமக்கு யார், எது தேவை என்ற இந்த சாரமில்லா சம்ஸாரம் விளங்கி விடும். |2||

உண்மையில் இங்கு யாரும் தனக்கு உண்மையாக இல்லை என்பது தான் நிதர்சனம். ஏனெனில் மனம் தனக்காக வாழ வேண்டும் என்று நினைத்து மற்றவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது வேதனையிலும் வேதனை. |3||

ஒருவர் தனக்காக வாழ நினைத்தால் அவரை சுற்றி சந்தர்ப்பவாத கூட்டம் இருக்கவே இருக்காது, மாறாக அவரின் வழி சரி என்று உணர்ந்த ஒரு சிலர் மட்டுமே இருப்பார்கள். |4||

## இதன் பொருள் வெளிப்படை

பிணத்தை தின்று வாழும் கழுகுகளை, ஓநாய்களை, புலுக்களை ஒதுக்கும் மனித மனமே, ஏன் பிறர் பணத்தையோ, உணர்வையோ, உழைப்பையோ பரித்து தின்று வாழும் மனித மனங்களை ஏற்று கொள்கிறாய்? என்னே உன் பெருமிதம்! **|5||**

எளிமைக்கும் ஏழ்மைக்கும் வித்தியாசம் தெரியாத மனமே, உனக்கு எப்படி எழை, பணக்காரன், ஜாதிகளில் மட்டும் வித்தியாசம் தெரிகிறது? யார் கற்று கொடுத்தார்கள்? என்ன ஒரு ஆச்சரியம்! **|6||**

பணத்திலும், மண்ணிலும், சொந்தங்களிலும், பதவிகளிலும் நிம்மதியை தேடி தேடி அலையும் மனமே, அந்த நிம்மதியே **நீ தான்** என்று எத்தனை பேர், எத்தனை முறை, எத்தனை வகையில், கூறியும் உனக்கு ஏன் விளங்கவில்லை! **|7||**

பல நாமங்களை வாயார போற்றியும், பல சாதனைகளை உடலளவிலும், மனதளவிலும் செய்தும், மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து இளைத்தது தான் மிச்சம், என்று ஏன் உணர மறுக்கிறாய் மனமே! **|8||**

யாருக்காக வாழ்கிறாய் என்பதை என்றாவது ஒரு நாள் வாழ்வில் நினைத்ததுண்டா மனமே? உனக்கென்ன வேண்டும் என்று உனக்கே தெரியாத போது, நீ எப்படி பிறர்க்கு உண்மையாக வாழ இயலும்? உன் பாசாங்க வலையில் நீயே சுற்றி கொண்டிருக்கிறாய் என்பதை உணரு! **|9||**

குழந்தை பருவத்தில் விளையாட்டிற்கு அடிமையானாய், குமார பருவத்தில் நன்பர்களுக்கு அடிமையானாய், வயதிற்கு வந்த பருவத்தில் உடல் உணர்ச்சிகளுக்கு அடிமையானாய், நடுபருவத்தில் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், பணத்திற்கும், பதவிக்கும் அடிமையானாய், இறுதி பருவத்தில் நோய்க்கு அடிமையானாய். இப்படி வாழ்க்கை முழுவதும் அடிமையாகவே இருக்க முடிவெடுத்தால், இந்த வாழ்வில் என்ன மிஞ்சும் மனமே! **|10||**

பெற்றோர் என்றால் உணர்ச்சி வயபடுகிறாய், சகோதர-சகோதரி என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய், நண்பர்கள் என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய், மனைவி-பிள்ளைகள் என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய், சொந்த-பந்தம் என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய், வீடு, பணம், பொன், பொருட்கள், வாகனங்கள் என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய், அட வீட்டில் வளர்க்கும் நாய், கோழி, ஆடு, மாடு என்றாலும் உணர்ச்சி வயபடுகிறாய். இவ்வாறு எல்லாவற்றிக்கும் உணர்ச்சி வயபடும் மனமே, அந்த உணர்சிக்கு உணர்வாய் உள்ள உணர்வான **என்னை** ஏன் உணர மறுக்கிறாய்! **|11||**

உலகில் வாழும் அனைத்து உயிரற்றவை மற்றும் உயிரினங்கள் அது மடிந்த பிறகு, ஏதோ ஒரு வகையில் இந்த பிரபஞ்சத்திற்கு பயன்படுகிறது, ஆனால் மனம் கொண்ட மனிதா, நீ இறந்த பிறகு எதற்கும் பயனற்று போகிறாய், என்பதை சற்று சிந்திபாய்! **|12||**

ஞான(அறிவு)கண் முலம் இறைவ(என்)னை அறியாத மனமே, நீ எந்த ஊர், மலை, தேசம், வழிபாட்டு தலங்கள் சென்று இறைவ(என்)னை அறிய போகிறாய்? **|13||**

எத்தனை மலைகள் ஏறினால் என்ன, எத்தனை கோவில்கள் சுற்றினால் என்ன. அவ்விடத்திற்கு செல்ல ஆசைபட்டு மனம் போக்கில் சுற்றி திரியும் மனிதா, அந்த மலைகளிலும், கோவில்களிலும் தேடும் இறைவன் **நீயே** என்று உணர்ந்து, சும்மா இரு! **|14||**

அம்மா உடல் அளித்தார், அப்பா உயிர் அளித்தார், குரு ஞானம் அளித்தார், இவற்றை உபயோகித்து, சிவமாகிய த(எ)ன்னை அறிந்து, வந்த வேலையை முடித்து விடு மனமே! **|15||**

மனமே, உன்னை புகழ்ந்தால் மகிழ்கிறாய், இகழ்ந்தால் துக்கபடுகிறாய், உனக்கு பிடித்தவர்களை கொண்டாடுகிறாய், பிடிக்காதவர்களை வெறுக்கிறாய். உன்னை சதா இயக்கி கொண்டிருக்கும் என்னை மட்டும் கண்டுகொள்வதில்லை, என்பதை நீ அறிந்து கொள்! **|16||**

உன்னை கெஞ்சி கேட்டால் நீ மிஞ்சுகிறாய், உன்னை மிஞ்சி கேட்டால் நீ கெஞ்சுகிறாய், இப்படி இருந்தால் **நான்** என் செய்வேன் மனமே? **|17||**

இருளில் இருளையும், ஒளியில் ஒளியையும் காணும் மனமே, உனக்கு இருளையும், ஒளியையும் அறிய வைக்கும் என்னை அறியாது இருப்பதேன்? **|18||**

முடிவெடுக்க தைரியமில்லா மனமே, கேட்டவற்றை(கற்றவற்றை) சித்தமாக (எண்ண தொகுப்பாக) கொண்ட மனமே, புத்தியாக யுக்தியை கையாளும் மனமே, தன்முனைப்பை அஹங்காரமாக வெளிப்படுத்தும் மனமே, நீ உன் உள்ளத்தெளிவால் என்னை அறிவது எப்போது! **|19||**

ஊர் உலகெலாம் சுற்றி திரிந்து, ஆசைபட்டதில் பற்றை வைத்து, நிறைவேறாத ஆசையோடு உலகை விட்டு, ஆசைபட்டதற்காக வெவ்வேறு உடல்களை எடுக்கும் மனமே, நீ இந்த உலகில் வந்து வாழ்ந்த பயன் யாது? **|20||**

திருமந்திரத்தில் 3000 பாடல்கள், திருகுறளில் 1330 குறள்கள், பகவத் கீதையில் 18 அத்தியாயங்கள், பல்லாயிர கணக்காண தேவார பாடல்கள், திருபுகழ் பாடல்கள், பாரதியாரின் பாடல்கள், உபநிடதங்கள், திருக்குரான், பைபில் என்று அத்தனை படைப்புகளும் மனதினை செம்மைபடுத்த இயற்றப்பட்டதே, இது போன்ற திருவாசகங்களை படித்து உணராத மனங்களா, இந்த சிறு வாசகங்களை படித்து உணர போகிறது? என்னே ஒரு எதிர்பார்ப்பு பராபரனுக்கு! **|21||**

**ஓம் தத் சத்**

# 5

# உள்ளக்குமுறல்கள் - 2

**அ**கத்திலொரு வேஷமும்புறத்தி லொருவேஷமும் கொண்டலையும் மனமே! உன் செயல்களுக்கு நான்சாக்ஷி என்றுணர்வாய். **||1||**

**ஆ**சையால் நீ உலகையாளினும் மனமே! உன்னாசை யன்னால் பூர்த்தி செய்யபடுகிற தென்றுணர்வாய். **||2||**

**இ**ன்பத்தை ருசிக்கத் தாவித்தாவி அலையும் மனமே! உன்னிலின்பமாய் என்னையு ணர்வாய். **||3||**

**ஈ**ஸ்வர(ஈச)னாய் படைத்து, காத்தழிக்கும் மனமே! ஈஸனுக்கீசனாய் நானிருக்கிறேனென் றுணர்வாய். **||4||**

**உ**ண்மையையு ணரஅங்குமிங்குத் தேடியலையும் மனமே! உன்னிலுண்மையான உணர்வான என்னையுணர்வாய். **||5||**

**ஊ**ருக்கொரு தெய்வமென்று படைத்துகூத்தாடும் மனமே! உன் படைபிற்கு நான் காரணமென்றுணர்வாய். **||6||**

**இதன் பொருள் வெளிப்படை**

**எ**ட்டு சித்திகள் பெற்றுமடங்கா மனமே!
உன்சித்திக்கெல்லாம் என்னிருப்பே
காரணமென்றுணர்வாய். ||7||

**ஏ**கத்துவத்தை ஏற்கமறுக்கும் மனமே! உன்னில்
ஏகமாய் நானிருக்கிறே னென்றுணர்வாய். ||8||

**ஐ**யங்கள் பல தோற்றுவிக்கும் மனமே! உன்
ஐயங்கலெல்லாம் என்னையறிய
விலகுமென்றுணர்வாய். ||9||

**ஒ**ன்பது வாயிற்கோட்டையிறா ட்சிசெய்யும் மனமே!
உன்னாட்சிக்கு நானரசனென் றுணர்வாய். ||10||

**ஓ**ம்காரத்தை ஜபத்யானம் செய்யும் மனமே!
ஓம்கார ஸ்வரூபன் நானென் றுணர்வாய். ||11||

**ஔ**ஷதங்கள் உடலிற்காய கற்பமாகும் - மனமே
உனக்கான காயகற்பம் நானென் றுணர்வாய். ||12||

ஃ என்ற அக்ஷரத்தை படைத்த மனமே!
உன்னை படைத்தவன் நானென் றுணர்வாய். ||13||

**ஓம் தத் சத்**

# 6

# குருநாதர் மணிமாலை

**அ**ண்டமாய், பிரம்மாண்டமாய், சடமாய், அசடமாய் அனைத்துக்கும் நாயகரான ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஆ**னந்தமே ஆனந்தத்தை ஆனந்தத்திற்கு ஆனந்தமாய் அளித்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**இ**ன்னலுற்ற (இருமைகளுற்ற) சம்ஸாரத்தில், இன்பமாய் வாழ வழிகாட்டிய ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஈ**சனாய் பராவித்யாவை படைத்து, பாமர(என்)னை காத்து, அஞ்ஞானத்தை அழித்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**உ**ன்னிலும், என்னிலும், எல்லாவற்றிலும் இருக்கும் அறிவு ஒன்றே, அது நீயே, என்று அறியவைத்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஊ**மையாக (இருளாக) இருந்த மனதை, ஒளிரவைத்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**இதன் பொருள் வெளிப்படை**

**எ**ன் மன இரு(மைக)ளை களைந்து, ஒருமையை புகட்டிய ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஏ**டாக இருந்த இந்த மனதை, பராபரனாக்கி மணிமாலை பாடவைத்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஐ**யம் கொண்ட மனதினை அறிவால் ஆட்கொண்ட ஐயனே ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஒ**ன்றென்றிரு அது நீயென்றிரு என்று உபதேசித்த ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**ஓ**ம்காரனந்த ஸ்வரூபமான ஸ்ரீ பிரபஞ்ச(குரு)நாதர் சரணம்.

**சரணம் சரணம் திருவடி சரணம்**

**சரணம் சரணம் ஸ்ரீபிரபஞ்ச(குரு)நாதர் சரணம்**

**ஓம் தத் சத்**

திருமந்திரத்தில் 3000 பாடல்கள், திருகுறளில் 1330 குறள்கள், பகவத் கீதையில் 18 அத்தியாயங்கள், பல்லாயிர கணக்காண தேவார பாடல்கள், திருபுகழ் பாடல்கள், பாரதியாரின் பாடல்கள், உபநிடதங்கள், திருக்குரான், பைபில் என்று அத்தனை படைப்புகளும் மனதினை செம்மைபடுத்த மனிதர்களால் இயற்றப்பட்டதே.

**- பராபரன்**

